செ.வெ.எண்:42/ஜூன் நாள்:18.06.2016

# இராமநாதபுரம் மாவட்டம்

## இராமநாதபுரம் அரசு தலைமை மருத்துவமனையில் உள்ள ஒவ்வொரு மருத்துவ சிகிச்சைப் பிரிவுகளாக நேரடியாக சென்று

## மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் ஆயவு செய்து மருத்துவர்களுக்கு அறிவுரை வழங்கினார்

இராமநாதபுரம் மாவட்டம், இராமநாதபுரம் அரசு தலைமை மருத்துவமனை டயலைசிஸ், நரம்பியல் (Neurology), மின்னொலி இதய வரைவு (Echo cardiography) சிகிச்சை உள்ளிட்ட பல்வேறு நவீன மருத்துவ வசதிகளுடன் செயல்பட்டு வருகிறது. மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் இன்று (18.06.2016) ஒவ்வொரு மருத்துவ சிகிச்சைப் பிரிவுகளாக நேரடியாக சென்று பார்வையிட்டு ஆய்வு செய்து மருத்துவர்களுக்கு அறிவுரை வழங்கினார்.

இராமநாதபுரம் அரசு தலைமை மருத்துவமனை பொது மக்கள் தரமான மருத்துவ வசதியினை பெற ஏதுவாக பல்வேறு நவீன மருத்துவ வசதிகளுடன் செயல்பட்டு வருகிறது. தினந்தோறும் சராசரியாக 1,600 வெளிநோயாளிகளும், 100-க்கும் மேற்பட்ட வெளிநோயாளிகளும் மருத்துவ வசதி பெற்று பயனடைந்து வருகின்றனர். இன்றைய தினம் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் இராமநாதபுரம் அரசு தலைமை மருத்துவமனையில் உள்ள ஒவ்வொரு மருத்துவ சிகிச்சைப் பிரிவுகளாக நேரடியாக சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

உள்நோயாளிப்பிரிவு, வெளிநோயாளிப்பிரிவு, குழந்தைகள் நலப்பிரிவு, அவசர சிகிச்சைப் பிரிவு, டயலைசிஸ் சிகிச்சைப் பிரிவு , நியூராலஜி சிகிச்சைப் பிரிவு , மின்னொலி இதய வரைவு (Echo cardiography) சிகிச்சைப் பிரிவு உள்ளிட்ட அனைத்து சிகிச்சைப் பிரிவுகளையும் நேரடியாகச் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்விற்குப் பிறகு மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள், சிகிச்சைக்காக வருகை தரும் பொதுமக்கள் சிரமமின்றி சிகிச்சைப் பெற்று பயனடையுமாறு பணியாற்றிட வேண்டும் எனவும், ஒவ்வொரு சிகிச்சை மற்றும் பரிசோதனை பிரிவுகளிலும் எவ்வித குறைபாடுகளுமின்றி பராமரித்திட வேண்டுமெனவும் மருத்துவர்களுக்கு அறிவுரை வழங்கினார்.

அதன்பின்பு, இராமநாதபுரம் நகரம் பகுதியில் ரூ.8.17 கோடி மதிப்பில் புதிதாக கட்டிமுடிக்கப்பட்டுள்ள தங்கும் விடுதி வசதிகளுடன் கூடிய செவிலியர் பயிற்சி பள்ளி கட்டிடத்தினை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இவ்வாய்வின் மருத்துவ பணிகளின் இணை இயக்குநர் மரு.சகாய ஸ்டீபன்ராஜ்,இராமநாதபுரம் அரசு தலைமை மருத்துவமனை கண்காணிப்பாளர் மரு.கிருஷ்ணமூர்த்தி உள்பட அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**